**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 2018**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் சீபிசீ இனதும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) இன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி *2018 திசெம்பர்* 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் *இலங்கை கணக்கீட்டு நியமங்கள்* இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிகூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாரள்களினுடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) எல்கேஏஎஸ் 2 உடைய பந்தி 10 இன் பிரகாரம், இருப்புக்களை தற்போதைய நிலைக்கு மற்றும் நிலைமைக்கு கொண்டுவரும் வரையான அனைத்து ஏனைய செலவுகளும் சரக்கிருப்பு கிரயமாக கருதப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் எரிபொருளை இறக்குமதி மற்றும் | இது தொடர்பாக மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன மற்றும் 2019 ஆண்டில் கணக்கீட்டுக்கொள்கை மாற்றப்படவேண்டுமா இல்லையா என்பதனை தீர்மானிக்கும். | இது தொடர்புடைய நியமத்துடன் இணங்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான ரூபா 67,691.9 மில்லியன் கலால் வரி சரக்கிருப்பு கிரயமாக கருத்தில் கொள்ளப்படாமல் வருமானத்திற் கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான உண்மையான விற்பனைக்கிரயம், வருமானம் மற்றும் இறுதிஇருப்பின் பெறுமதி காட்டப்படவில்லை. | | |
| **(ஆ) எல்கேஏஎஸ் 16 - ஆதனம் பொறி மற்றும் உபகரணம் :** கூட்டுத்தாபனத்தால் முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த அண்ணளவாக ரூபா 4,821.48 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆயட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் உபபோகிப்பதுடன் அவைகள் கணக்கிப்படுகின்றன. மேலும்,மாதிரி பரீட்சிப்பில் வெளிப்பட்டதன்படி மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் 12 நிலங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவேதான் இச்சொத்துக்களின் நியாயமான பெறுமதியின் சரியானதன்மையில் சந்தேகம் காணப்படுகின்றது. | 10 காணிகளுக்குரிய உண்மையான உரிமை மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குரிய ஒரு காணியின் மறுமதீப்பீட்டு அறிக்கை இருந்திருக்கவில்லை. ஒரு காணி பௌதீக ரீதியாக சொந்தமானது அல்ல மற்றும் ஒன்று சிபிசியினால் பயன்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக மறுமதிப்பீட்டை செயற்படுத்த முடியவில்லை. அமைச்சினூடாக தற்போதைய நிலை தெரிவிக்கப்பட்டது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிலம் தெளிவாக அடையாளம் காணப்பட்டு பொருத்தமான நியமத்துடன் இணங்கப்பட்டு கணக்கிடப்படவேண்டும். |
| **(இ) எல்கேஏஎஸ் 36 – காலக்கழிவு** 2018 ம் ஆண்டிற்கான நட்டக்கழிவுச் சோதனை கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்டதா என்பதனை உறுதிசெய்ய எந்த ஆதாரமும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | சிபிசி 2018 ஆண்டிற்கான நட்டக்கழிவுச் சோதனை நடாத்தப்பட்டபோதிலும் நட்டக்கழிவுக்கான அறிகுறிகள் எதுவும் கிடைக்கவில்லை | இது நியமத்தை பின்பற்றவேண்டும் மற்றும் பொருத்தமான பதிவுகள் பேணவேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) இலங்கை மின்சாரசபையிடமிருந்து பெறவேண்டியவைகள் | 46,813.1 | 46,029 | 778.3 | தீர்வு செயன்முறை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது, இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் அமைச்சரவையிலிருந்து ஓர் தீர்வை பெறுவார் என நம்புகின்றோம் | நிலுவையை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் |
| (ஆ) இலங்கை சுங்கத்திற்கு செலுத்தவேண்டியவைகள் | 8,318.5 | 5,597.4 | 2,721.1 | இரு தரப்பினரிடமும் கொடுக்கல்வாங்கள்களை பதிவு செய்வதற்கான நேர இடைவெளி மற்றும் சுங்கத்தின் பிழைகள் காரணமாக வேறுபாடு எழுந்துள்ளது | நிலுவைத்தொகையை முன்கூட்டியே தீர்மானிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக சீபீசீயின் செயற்பாடுகள் ரூபா 105,050.6 மில்லியன் வரிக்கு பின்னரான தேறிய நட்டத்தினையும் ரூபா 104,769.6 மில்லியன் முற்றும் அடங்கிய மொத்த செலவினையும் ஈட்டியிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் ரூபா 281,761.5 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்துக்கள் நிலைமையைக் கொண்டிருந்தமை போன்ற விடயங்களின் மீது கவனம் கோரப்படுகின்றது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினுடைய ஒன்றிணைக்கப்பட்ட நட்டங்கள் நாணயமாற்று வீத வேறுபாட்டிலான எதிர்றையான தாக்கம் மற்றும் வெளிநாட்டு நாணய குறிக்கப்பட்ட கடன்கள் மீது ஏற்ப்பட்ட வட்டிச்செலவு மேலும் அதிகரிப்பதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. இது கூட்டுத்தாபனத்தினுடைய தேறி சொத்துக்களின் நிலமையில் மேலும் எதிர்மறை நிலையைத் தக்க வைப்பதை ஏற்படுத்தியது. இதனால், அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி இல்லாமல் கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் கூட்டுத்தாபனத்தின் இயலுமை என்பது சர்சைக்குரிய விடயமாகும். | கருத்துரை இல்லை | கூட்டுத்தாபனத்தின் எதிர்மறை சொத்துகளை குறைக்க சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை<br>ரூபா. மில்லியன் | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை இறைவரி மற்றும் இலங்கை சுங்கத்திடமிருந்து பெறவேண்டியவைகள் | 1,135.8 | வரி ரிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் சம்பந்நப்பட்ட ஏனைய ஆவணங்கள் | அவசியமான பதிவுகள் 2019 ஆண்டில் அனுப்பப்பட்டது | தொகையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |
| உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திடமிருந்து பெறுமதிசேர் வரி தொடர்பாக பெறவேண்டியவைகள் | 326.4 | வரி ரிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் சம்பந்நப்பட்ட ஏனைய ஆவணங்கள் | அவசியமான பதிவுகள் 2019 ஆண்டில் அனுப்பப்பட்டது | தொகையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |
| உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியவைகள் | 376 | வரி ரிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் சம்பந்நப்பட்ட ஏனைய ஆவணங்கள் | 1998 இல் இந்த பதிவு பதிவுசெய்யப்பட்டது மற்றும் இணக்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது | தொகையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |

### 1.5.5 துணைக்கம்பனியின் நிதிகூற்று மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

மீளாய்வு வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினலின் நிதிசார் கூற்றுக்கள், கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் தொடர்புபட்ட நிலுவைகள் / பரிவரிதனைகள் என்பவற்றுடன் ஓர் இணக்கமின்மையை ஏற்படுத்தும் என்பதனால் பின்வரும் விடயங்கள் காரணமாக என்னால் அவற்றுக்கு உரிமை மறுக்கப்பட்டது.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார வருமதிகளான ரூ.174.7 மில்லியன் தொடர்பில் 19 தரப்புகளுக்காக நீண்ட காலங்களுக்கு ஏற்பாடளிக்கப்பட்டிருந்த பெறுமதியிழப்பு, கம்பனியால் திருப்பப்பட்டும் மற்றும் இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் சார்த்தப்பட்டது. எவ்வாறாயினும், அந்த திருப்புதலுக்கு முன்னதாக அவற்றின் மீள்பெறும் தன்மையை மதிப்பீடு செய்வதற்கு ஏதேனும் மதிப்பிடுதல் செய்யப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் இருக்கவில்லை. மேலும், வேறு ஏதேனும் இணைந்த சான்றுகள் மூலமாக இந்த வியாபார வருமதி நிலுவைகளின் உளதாம் தன்மை மற்றும் துல்லியத்தன்மை என்பன கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை. | நியமத்திற்கேற்ப முறையே ரூபா.174.7 மில்லியன் மற்றும் ரூபா.127.2 மில்லியன் வியாபார வருமதிகள் மற்றும் மெல்ல நகரும் இருப்புக்களினுடைய திருப்புதல் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. ஆனால் விரிவான வெளிப்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வியாபார வருமதிகள் பதிவழிப்பு செய்யப்படுவதற்கு முன்பு உண்டையில் உறுதிப்படுத்தபடவேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூ.657 மில்லியன் பெறுமதியான கையிருப்பு பெறுமதி மதிப்பீட்டின் துல்லியத்தன்மை மற்றும் முழுமையான தன்மை பின்வரும் காரணங்களினால் கணக்காய்வில் நம்பிக்கைக்கு உரியவையாக கருதப்படுவதற்கு முடியவில்லை.<br><br>(i) பாரிய அளவுகளில் 2500 இற்கும் மேற்பட்ட கையிருப்பு வகைகள் தொழில் முயற்சி மூலவளத்திட்டமிடல் (ERP) முறைமையில், அதாவது கம்பனியின் SAP, அந்த கையிருப்பு உருப்படிகளின் பெறுமதிகளை முறைமையில் பதிவு செய்யாது உள்ளெடுத்துக் கொண்டமை அவதானிக்கப்பட்டது.<br><br>(ii) கம்பனியின் நடைமுறைப்படி, ஒவ்வொரு வருட முடிவிலுமாக, மெதுவாக நகரும் கையிருப்புப் பொருட்களிற்கான ஓர் ஏற்பாடளித்தல் அவற்றின் பரிசோதனையிலிருந்து 3 | தொடர்புடைய கருத்துக்கள் எதுவும் வழங்கப்படவில்லை | கணக்குகளுக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் இருப்பு உருப்படிகளின் பெறுமதி மற்றும் பொருத்தமான மதிப்பீடு மேற்கொள்ளப்படவேண்டும். நியமத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றில் தொடர்புடைய வெளிப்படுத்தல் செய்யப்படவேண்டும் |

| | | |
|---|---|---|
| இற்கும் மேற்பட்ட வருடங்களுக்கு அனைத்துக் கையிருப்புப் பொருட்களுக்கும் மேற் கொள்ளப்பட்டிருந்தது. கம்னியின் பதிவுகளின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூ.230.2 மில்லியன் பெறுமதியான 3 வருடங்களிற்கும் மேற்பட்ட மெதுவாக நகரும் கையிருப்புகள் காண்பிக்கப்பட்ட போதிலும் ரூ.15.6 மில்லியன் மாத்திரமே அதற்காக ஏற்பாடளிக்கப்பட்டிருந்தது. ரூ.214.6 மில்லியனால் ஏற்பாடளித்தலின் குறைத்தலுக்கு முன்னதாக ஒரு முறையான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப் படவில்லை. | | |
| (இ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) என்பவற்றுக்கிடையிலான நிலுவை மிகுதிகளின் துல்லியமான தன்மை, மதிப்பீடு மற்றும் உளதாம்தன்மை பின்வரும் காரணங்களுக்காக கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை. | | |
| (i) எக்ஸிம; (Exim) வங்கிக் கடன் தீர்த்தலைக் கருத்தில் கொண்டு லீற்றரொன்றுக்கு 13 சதவீத கட்டணத்தில் கடனின் வட்டிப் பகுதியை அவர்களது கணக்கிலிருந்து நீக்குவதற்காக, இ.பெ.கூ இடமிருந்தான ஒரு வருமதித் தொகையான ரூ.1,173 பதிவழிக்கப்பட்டிருந்தது. எனினும், கம்பனியால் இது தொடர்பில் எந்தவொரு பெறுமதியிழப்பு ஏற்பாடளித்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | சிபிசியின் தீர்மானம் செல்லுபடியற்றது, இவ் விடயத்தை உடனடியாக தீர்க்க சிபிசி/சிபிஎஸ்டிஎல் தலைவர் கூறினார். சிபிசி/சிபிஎஸ்டிஎல் முதுமை முகாமைத்துவ கூட்டத்தில் இது உறுதிசெய்யப்பட்டது மற்றும் தலைவர் சிபிசியினுடைய டிஜிஎம் (F) சபையின் அங்கீகாரத்தை பெறவும் மற்றும் செலுத்தப்படாத வட்டியை மேலும் தாமதமின்றி தீர்க்கவும் அறிவுறுத்தினார். | சிபிசி மற்றும் எல்ஜஓசியுடன் அத்தகைய கடன் மற்றும் சட்டபூர்வமான தன்மையை கருத்திற்கொண்டு ஓர் தீர்வுக்கு வர வேண்டும். |
| (ii) மேலே (i) இல் காட்டிய தொகை உட்பட, ரூ.2,475.8 மில்லியன் வேறுபாடொன்று கம்பனியின் நிதிசார் கூற்றுகளில் இ.பெ.கூ இடமிருந்து வருமதியாகக் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் மற்றும் அதனுடன் தொடர்புபட்டதாக இ.பெ.கூ இன் மீளாய்விற்குட்பட்ட வருட முடிவிலான நிதிசார் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் இடையில் அவதானிக்கப்பட்டது. | 31 டிசெம்பர் 2018, உங்கள் வேறுபாடுகளின்படி ரூபா 2,475.8 மில்லியன் சிபிசி மற்றும் சிபிஎஸ்டிஎல் இடையில் வியாபார பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய நிலுவைகள் கூறப்பட்ட காலங்களில் இவ் நிலுவைகளுக்கிடையில் வேறுபாடுகள் இல்லை என்பதனை நாங்கள் அவதானித்தோம் | இணக்கம் செய்யப்படாத நிலுவைகள் அனைத்தும் தெளிவுபடுத்தப்படவேண்டும் |

| | | |
| --- | --- | --- |
| (iii) LIOC இடமிருந்து பெற்றுக் கொண்ட மிகுதி உறுதிப்படுத்தலுக்கமைய, கம்பனிக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ. 351.5 மில்லியன், ஆனால் இ.பெ.கூ இன் நிதிசார் கூற்றின்படி சம்பந்தப்பட்ட தொகையானது ரூ.406.59 மில்லியனாக காண்பிக்கப்பட்டள்ளது. அதனால், இவ்விரண்டு மிகுதித் தொகைகளுக்கும் இடையில் இணக்கம் காணப்படாத ரூ.55.1 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்தை இணக்கம்செய்து முடிவுறுத்துவதற்கான விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. | இணக்கம் செய்யப்படாத நிலுவைகள் அனைத்தும் தெளிவுபடுத்தப்படவேண்டும் |
| (<) நிறுவனத்தின் நிதிசார் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டவாறு சென்மதிகளாகவுள்ள வருமானவரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)> நிறுத்தி வைக்கப்பட்ட வரp (WHT)> உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC) என்பவற்றின் மொத்தத் தொகைக்கும் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (IRD) பேணப்பட்ட பதிவுகளில் மீளாய்வின் கீழான வருட முடிவில் காண்பிக்கப்பட்ட மிகுதிகளுக்குமிடையில் ரூ. 199.8 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எங்கள் நிதிக்கூற்றில் கணக்கிடப்படாத ஐஆர்டி யால் எழுப்பப்பட்ட கருத்த வேறுபாடுகளுக்கு எதிராக உள்நுழைக்கப்பட்ட மேல்முறையீடுகள் | நிலுவையில் உள்ள அனைத்தையும் ஐஆர்டியுடன் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் |
| (c) மேலதிக கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் பெறுமதி சேர் வரியான (VAT) இன் உள்ளிடுதல் தொகைகளான முறையே ரூ. 6.8 மில்லியன் மற்றும் ரூ. 8.06 மில்லியன் என்பன முறையே 2008 மற்றும் 2010 வருடங்களிலிருந்து மீளறவிட முடியாதவையாக உள்ளதினால் அவற்றின் மீளப் பெறுதல் ஐயத்திற்குரியதாகும். எனினும், மீளாய்வாண்டின் அறுதியில் கூட இது தொடர்பில் ஏற்பாடளித்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | 2006 ஆண்டு உழைக்கும்போதான வரியினுடைய மேலதிககொடுப்பனவு காரணமாக உழைக்கும்போதானவரி வித்தியாசங்கள் எழுந்துள்ளது மற்றும் இதனை பதிவழிக்க அல்லது மீளஎழுதப்பட சபைத்தாள் ஒன்று போடப்பட்டுள்ளது | அனைத்த வரி நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |
| (C) நிறுத்தி வைக்கப்பட்ட வரp (WHT) மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) வெளியிடல் என்பவற்றின் சென்மதித் தொகைகளான முறையே ரூபா.19.1 மில்லியன் மற்றும் ரூபா.13.9 மில்லியன் என்பவற்றின் நம்பகத்தன்மையும் ஐயத்திற்குரியது, ஏனெனில் இத்தொகைகள் தீர்த்து | உள்நாட்டு இறைவரித்திணைக்களம் உறுதிப்படுத்தப்படாததால் எவ்விதமான பொறுப்புக்களும் ஏற்ப்படவில்லை. கணக்காய்வில் காட்டப்பட்ட தொகையுடன் உடன்படவில்லை | நீண்டகாலமாக நிலுவையிலிருக்கும் அனைத்து வரி நிலுவைகளும் தீர்க்கப்படவேண்டும் |

| | | |
|---|---|---|
| வைக்கப்படாது நீண்ட காலங்களாக வருடா வருடம் தொடர்ச்சியாக முன்கொணரற்பட்டு வருகின்றன. | | |
| (v) எல்கேஏஎஸ் (LKAS) 16 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியால் முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த அண்ணளவாக ரூபா 5,195 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆயுட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் உபபோகிப்பதுடன் அவைகள் கணக்கிப்படுகின்றன. மேலும், கம்பனி தொடக்கத்திலிருந்து அதன் சொத்துக்களை மீள்மதீப்பீடு செய்திருக்கவில்லை மற்றும் இந்த நோக்கத்திற்காக பொருத்தமான மறுமதிப்பீட்டுக் கொள்கை ஸ்தாபிக்கப்படவில்லை. எனவே நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் அத்தகைய சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை பிரதிபலிக்கவில்லை. | ஜசிஎஎஸ்எல் உதவியுடன் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்ய உடன்பட்டது | கம்பனி நியமங்களின் தேவைப்பாடுகளுகிணங்க மேண்டும் மற்றும் அதற்கேற்ப சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்படவேண்டும் |
| (V) 2017 இல் மீண்டெடும் செலவாக இனங் காணப்பட்ட தொகையான ரூ.32.6 மில்லியன் நடைமுறையிலுள்ள மூலதனக் கணக்கிலிருந்து (WIP) செலவுக் கணக்கிற்கு (திருத்துதல் மற்றும் பராமரித்தல்) மாற்றப்பட்டு மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் திருப்பல் செய்யப்பட்டது. எனினும், அந்தத் திருப்பலுக்கு ஒரு முறையான அடிப்படை அவதானிக்கப்படவில்லை. அதன் விளைவாக, மீளாய்விற்குட்பட்ட வருடத்திலான தேறிய இலாபம் மற்றும் செலவுகள் என்பன அத்தொகைகளினால் முறையே உயர்த்தி குறிப்பிடப்பட்டும் மற்றும் குறைத்தும் குறிப்பிடப்பட்டன. | தொடர்புடைய கருத்துக்கள் எதுவும் வழங்கப்படவில்லை | அவற்றை மூலதனமாக்குவதற்கு முன்பு செலவினத்தின் தன்மையை சரியாக அடையாளம் காண வேண்டும் |
| (x) பல போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் கப்பல் கட்டணங்கள் கம்பனியால்; LKAS இன் பிரிவுகள் 27 மற்றும் 28 இற்கு முரணாக காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுக் கணக்கிட செய்யப்பட்டுள்ளன. | ஓப்புக்கொண்டது மற்றும் எதிர்காலத்தில் நடைபெறமாட்டாது | நியமத்தின் தேவைப்பாடுளுக்கேற்ப அட்டுறு அடிப்படை பயன்படுத்த வேண்டும் |
| (X) செப்டெம்பர் 8, 2018 அன்று முத்துராஜவெல SPBM இலும் மற்றும் ஒக்டோபர் 12, 2018 அன்று கொலன்னாவை நிலையத்தில் அறிவிக்கப்பட்ட இரண்டு பெரும் | புலனாய்வு மேற்க்கொள்ளப்பட்டு பொறுப்பான ஊழியர்களிடமிருந்து மீட்க்கப்படும் என நம்புகின்றது. | பொறுப்படைய தரப்பினரிடமிருந்து அனைத்து நட்டங்களும் மீளப்பெறபடவேண்டும் |

எரிபொருள் கசிதல் காரணமாக ஏற்பட்ட ரூ 150 மில்லியனுக்கு மேற்பட்டதாக கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த இழப்பிற்கு கம்பனியால் மீளாய்விற்குட்பட்ட வருட முடிவிலான நிதிசார் கூற்றுகளில் எந்தவொரு ஏற்பாடளித்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

---

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிராகரிக்கப்பட்ட கப்பற் சரக்கின் சுமையிறக்கத்திற்கு முன்பாக சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையான ரூ.1,617.2 மில்லியன் ரூ.648 மில்லியன் கலால் தீர்வையை உள்ளடக்கியுள்ளதுடன் 2017 ஜனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட பின்னைய கட்டணங்களிலிருந்து அது மீளப் பெறப்படவில்லை அல்லது தீர்க்கப்படவில்லை. | தரத்தில் பாரிய விலகல் காரணமாக இறக்குமதி நிராகரிக்கப்பட்டது மற்றும் சுங்க பணிப்பாளரிடமிருந்தான அறிவுறுத்தலின் கீழ் தெலுத்தப்பட்ட ரூபா. 1,617,202,705 தொகையை மீளப்பெறுவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன | நிலுவையை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (M) பொதுத் திறைசேரியிலிருந்து தொகையை மீளப் பெறுதல் என்ற அடிப்படையில் கப்பற் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் 2002 இலிருந்து நிலுவையாக இருந்த தொகையை தீர்ப்பதற்காக சுங்கத் திணைக்களத்திற்கு ரூ.57.7 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டது. எனினும், இற்றை வரை கூட பொதுத் திறைசேரியிலிருந்து அத்தொகையை மீளப் பெறுவதற்காக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2014 இல் ரூபா. 57,736,913 கொடுப்பனவுசெய்யப்பட்டது மற்றும் தொகைகளை தீர்க்க பல நடவடிக்கைகள் எடுத்தது | தொகையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்கள் படி, 2007 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகைகளுக்காக இடம்பெற்ற ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் மக்கள் வங்கிக்கு கூட்டுத்தாபனத்தால் ரூ.4,591.2 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது. எனினும், இது கூட்டுத்தாபனத்தின் கணக்குகளிற்கு கொண்டு வரப்படவில்லை. | மக்கள்வங்கிக்கு ரூபா. 3,847.1 மில்லியன் தொகை செலுத்தபடவேண்டும் தொடர்பாக நாங்கள் கவனத்தில் எடுக்கவில்லை | மக்கள் வங்கியுடன் அரசநிறுவனமாக தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை-நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) 4.2.3(b) ஆம் வழிகாட்டல் | துணை கம்பனியின் இலக்குகளை அடைவதை உறுதிசெய்வதற்கான அத் துணை கம்பனியின் செயல்திறன் அவ்வப்போது சபையால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டலுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும் | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| 4.2.6 ஆம் வழிகாட்டல் | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து 30 நாட்கள் அல்லது அதற்கு முன் வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு காலாண்டு செயல்திறன் அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை | ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கைகள் வரிசை அமைச்சிற்கு அரையாண்டு மற்றும் முழு ஆண்டு அறிக்கைகளாக அனுப்படுகின்றன. | பொருத்தமான பதிவுகள் மற்றும் ஒப்புதல்கள் வைத்திருக்க வேண்டும் |
| (ii) 4.3 ஆம்வழிகாட்டல் | சபைக்கூட்டம் முடிவடைந்து 10 நாட்க்களுக்குள் சபை கூட்டக் குறிப்பானது வரிசைஅமைச்சின் செயலாளருக்கு அனுப்பி | இது சாதாரண நடைமுறை இல்லை மற்றும் எதிர்காலத்தில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | வழிகாட்டல் 5.2.4 | epjpahz;bd; Muk;gj;jpw;F 3 khjq;fs; Kd;gjhf tiuGg; ghjPL gzpg;ghsu; fs; rigapd; mDkjpf;fhf rku;g;gpf;fg;gl;bUf;ftpy;iy. | குறிக்கப்பட்டது. இச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டியபடி 2019 ஆண்டுக்கான பாதீட்டில் இயக்குனர் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| | வழிகாட்டல் 5.2.5 | 2018 ம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட இறுதிபாதீட்டின் பிரதிகள் வரிசை அமைச்சு, பொது முயற்சி திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை | குறிக்கப்பட்டது. வழிகாட்டலில் குறிக்கப்பட்ட திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக பாதீட்மை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| | 9.3 ஆம் வழிகாட்டல் | அமைச்சு,பொதுத் திறைசேரி,பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. | இது தற்போது மதிப்பாய்வு செய்யும் பணியில் உள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (ஆ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை. | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. எனினும், முகாமையாளர் (விசாரணை), சந்தைப்படுத்தல் முகாமையாளர் (சில்லறை), பிராந்திய முகாமையாளர் (மத்தியம்) போன்ற A தரத்திலுள்ள 13 பதவிகளை உள்ளடக்கிய வெற்றிட பதவிகளின் கடமைகளை ஆற்றுவதற்கான 16 உத்தியோகத்தர்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 வருடம் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | 10 வெற்றிடங்களுக்கு உள்ளக விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளன மற் | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (இ) | 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/ 02/01ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 29 | ஊழியர்களது ஆளுக்குரிய வேதனங்களிலிருந்து கழித்துக்கொள்ளாது அதன் ஊழியர்களின் மீளாய்வாண்டிற்கான ரூபா 259.9 மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை (PAYE) சீபிசீ தாங்கிக் கொண்டிருந்தது. | ஊழியர்கள் சம்பளத்தில் மேலதிக நன்மையாக சேர்க்கப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) 2017 ஆண்டு 27 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரகாரம் கழிக்கப்படுகின்றது. | இது தொடர்புடைய சுற்றறிக்கையுடன் இணங்கவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை கள் | | | |
| (உ) | கொள்ளல் வழிகாட்டல் கள் - 2006 இன் 4.2 ஆம் வழிகாட்டல் | கம்பனியினால் ஆகக்குறைந்தது 3 வருடங்களிற்கான பிரதான கொள்ளல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | 2019 – 2021 காலப்பகுதிக்ான பெறுகைத்திட்டம் வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டது மந்றும் ஏனையவை ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகின்றன வரவிருக்கும் ஆண்டுக்ாகன பாதீட்டில் ஒதுக்கீடுகள் எதுவும் வழங்கப்படவில்லையென் பதனால் , அந்தஅந்த ஆண்டுகளின் பெறுகை திட்டத்தில் இது குறிப்பிடப்படவில்லை. | இது தொடர்புடைய நியமத்துடன் இணங்கவேண்டும் மற்றும் பொருத்தமான பதிவுகள் பேணப்படவேண்டும் |

### 1.8 காசு முகாமைத்துவம்

--------------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முந்திய வருட இறுதியிலான மிகுதிகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வின் கீழான வருட இறுதியன்றானவாறு அமெரிக்க டொலர்களினால் குறிக்கப்பட்ட நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்கள் ரூ.1,311.6 மில்லியன் அல்லது 493 சதவீதம் மற்றும் ரூ.115,021.1 மில்லியன் அல்லது 64 சதவீதம் என்பவற்றால் முறையே அதிகரித்தது. இதன் விளைவாக, கடனின் மொத்த செலவு ரூ.94,770.6 மில்லியனாகியதுடன் அது வட்டிச் செலவாக ரூ.12,053.3 மில்லியனை உள்ளடக்கியதுடன் நாணய மாற்று வீத வேறுபாட்டில் மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் கூட்டுத்தாபனம் ரூ.82,717.3 மில்லியன் நட்டம் அடைந்தது.<br>இதே வேளையில், மொத்த முதலீடு ரூ.83,180.3 மில்லியனால் அல்லது 176 சதவீதத்தால் அதிகரித்ததுடன் நிதிசார் கூற்றுகளின் படி,ரூ.7,732.9 மில்லியன் | இரண்டு அரச வங்கிகளுடாக மட்டும் அமெரிக்க டொலர் வாங்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஏவ்வாறாயினும் அத்தரகய வங்கிகள் சிபிசி கேள்வியை பூர்த்திசெய்ய அமெரிக்க டொலரை வழங்கவில்லை. ஆகவே அந்நியச் செலவாணி நட்டத்தை குறைக்க குறைந்தபட்சம் முதலீடு செய்ய இந்த நிதியைப் பயன்படுத்தியுள்ளது.<br><br>மேலும், எதிர்காலத்தில் பரிமாற்றவீத மாறுபாடுகளைத் தவிர்க்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>இதற்கு மேலதிகமாக இரு வங்கிகளும் சிபிசி கேள்வியை பூர்திதசெய்ய முயற்சித்தன என்று வைத்துக்கொள்வோம், இலங்கை அந்நியசெலவாணி சந்தையில் சிபிசியின் தொடர்பு மிகவும்குறிப்பிடத்தக்கதாக இருப்பதால் நாட்டின் அந்நியசெலவாணி வீதம் மேலும் மோசமடைக்கூடும். | ஏற்படக்கூடிய நட்டத்தை குறைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

மாத்திரமே வட்டி வருமானமாக ஈட்டப்பட்டது. நிதிசார் கூற்றுகளில் தோன்றுமாற் போல, மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தால் கடன் பெற்ற நிதிகளை உபயோகித்து பல்வேறுபட்ட குறுகிய கால வைப்புகளில் ரூ.83,180.3 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. எனினும், அவர்களுக்கு இருந்த நிதியினை உபயோகித்து வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனம் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அவ்வாறு எடுத்திருப்பின், வட்டிச் செலவுகள் மற்றும் நாணயமாற்று வீத வேறுபாட்டு மீதான வட்டிச் செலவு மற்றும் நட்டத்தைக் கணிசமாளவிற்கு குறைத்திருக்கலாம்.

கூட்டுத்தாபனம் ரூ.1,310.8 மில்லியன; (US$ 7>725 மில்லியன்) கடனை மக்கள் வங்கியிடமிருந்து செப்டெம்பரில் 2018 இல், அதனிடமிருந்த நிதி நிலைமையைக் கவனத்தில் கொள்ளாது பெற்றுக் கொண்டது. அதன் பயனாக, நாணய மாற்று வீத வேறுபாடு மீது ரூ.114.7 மில்லியன் இழப்பு கூட்டுத்தாபனத்தால் மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் போது பெறப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவையாக உள்ள மிகுதி ரூ.1,425.5 மில்லியனிற்கு அதிகரித்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 105,050.635 மில்லியன் தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,055.634 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 106,106.269 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணய மாற்று வீத செலவுகள் மற்றும் நிதிச்செலவுகள் முறையே ரூபா. 77,795.287 மில்லியன் மற்றும் 1,534.245 மில்லியனால் ஏற்பட்டிருந்த அதிகரிப்பு வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | கூட்டுத்தாபனம் 2018 | கூட்டுத்தாபனம் 2017 | தொகுதி 2018 | தொகுதி 2017 |
|---|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| மொத்த இலாப விகிதம் (ஜீபீ) (%) | (0.58) | 6.05 | (1.74) | 4.64 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | (4.44) | 1.61 | (4.24) | 2.28 |
| தேறிய இலாப விகிதம் (என்பீ) (%) | (20.16) | 0.24 | (20.16) | 0.80 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.432 | 0.384 | 0.448 | 0.403 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.338 | 0.272 | 0.353 | 0.288 |
| **முதலீட்டு விகிதங்கள்** | | | | |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | 33.38 | (7.62) | 35.98 | (10.82) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் மற்றும் செயற்பாட்டு இலாப விகிதம் முறையே 110 சதவீதம் மற்றும் 375 சதவீதத்தால் குறைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய தேறிய இலாப விகிதம் 8,618 சதவீதத்தால் மற்றும் 2,611 சதவீதத்தால் குறைந்திருந்தது. வெளிநாட்டு நாணய மாற்று வீத செலவுகள் மற்றும் நிதிச்செலவுகள் முறையே 1,581 சதவீதத்தால் மற்றும் 15 சதவீதத்தால் ஏற்பட்டிருந்த அதிகரிப்பு பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டின் ஒக்டோபர் 29 திகதியிட்ட இல. 38/1140 சபைத் தீர்மானத்தின் பிரகாரம், 2014 ஜனவரி 1 இலிருந்து கூட்டுத்தாபனம் உரிமை கொண்டுள்ள வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலையங்கள; (CODO) மற்றும் திறைசேரி உரிமை கொண்டுள்ள வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலையங்கள் (TODO) அனைத்திலுமிருந்து ஒரு மாதாந்த பாவனைக் கட்டணத்தை அறவிடுவதற்கு | தீர்மானத்தின் தெளிவின்மை மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சபை தீர்மானத்தின் தெளிவின்மையிலிருந்து மேலேயுள்ள தலைப்பில் கூறப்பட்ட அவதானிப்பு ஏற்க்கதக்கதல்ல.<br>தற்போது சிபிசி வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களுக்கு (CODO) திறைசேரி உரிமை கொண்டுள்ள வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களைவிட (TODO) 0.25 சதவீதம் குறைவான தரகு செலுத்துகிறது, மேலும் தற்போது 0.25 சதவீதத்தில் | இது சபைத் தாள்களுடன் இணங்க வேண்டும் மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| சபை அனுமதித்தது. எவ்வாறாயினும், இந்தத் தீர்மானம் பல்வேறு காரணங்களுக்காக எதிர்பார்த்த வகையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் 2014 இலிருந்து கூட்டுத்தாபனம் வருடாந்தம் ரூ.300 மில்லியனுக்கும் அதிகமான தொகையை இழந்துள்ளது. அதன்படி, 2014 இலிருந்து 2018 வரை கூட்டுத்தாபனம் அண்ணளவாக ரூ.1,500 மில்லியன் திரட்டிய நட்டத்தைப் அடைந்துள்ளது. மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான வணிகர்களிடமிருந்தும் மாதாந்த பாவனைக் கட்டணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. | உருவாக்கப்படும் தரகு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விற்பனை நிலையங்களுக்கு வசூலிக்கப்படும். எனவே கூறப்பட்ட எம்யுஎப; (MUF) கூடுதலாக இருக்கும், அதே நோக்கத்திற்காக கூடுதல் கட்டணம் எதுவும் இருக்கமுடியாது. | |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனம், LIOC மற்றும; CPSTL இடையில் மேற்குறித்த வசதிக்கான பங்குதாரர் உடன்படிக்கை மற்றும் பங்கு விற்பனைக் கொள்வனவு உடன்படிக்கை என்பன டிசம்பர் 31, 2008 இல் காலாவதியாகி விட்டன. | சிபிசி மற்றும் சிபிஎஸ்டிஎல் இடையேயான ஒப்பந்தம் 21/05/2019 அன்று கையெழுத்திடப்பட்டது. ஒப்பந்தத்தை தயாரிக்கும்போது செயல்திறன் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்துக்கட்டணங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன | ஒப்பந்தங்கள் சரியான நேரத்தில் புதுப்பிக்கபடவேண்டும். |
| (ஆ) திரவ பெற்றோலிய வாயுவை விற்பனை செய்வது தொடர்பாக வாயுத் தொழில்துறையிலுள்ள நிறுவனத்திற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒக்டோபர் 20, 2006 இல் காலாவதியாகிவிட்டது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் புதிய உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளாதும் அல்லது முன்னைய உடன்படிக்கையை மீள் புதுப்பிக்காதும் திரவ பெற்றோலியத்தை தொடர்ச்சியாக அந்த நிறுவனத்திற்கு விநியோகித்து வருகிறது. மேலும்,கூட்டுத்தாபனம் திரவ பெற்றோலிய வாயுவை இன்னுமொரு தனியார் நிறுவனத்திற்கு ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்ளாமல் விநியோகிக்கிறது. | லாப்ஸ் காஸ் மற்றும் லிற்ரோ காஸ் ஆகியவற்றுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான ஏற்பாடுகளை சிபிசி செய்துள்ளதுடன் ஒப்பந்தங்களை முடிவுசெய்ய பல கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன | ஒப்பந்தத்தை முடிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மீளாய்விற்குட்பட்ட வருட இறுதியன்றானவாறு கூட இ.மி.ச, ஸ்ரீ லங்கன் எயர் லைன், முப்படைகள், இலங்கை புகையிரதத் திணைக்களம் போன்றவை உட்பட, 14 முக்கிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் | வரைவு ஒப்பந்தங்களை அந்தந்த தரப்பினர்களுக்கு அனுப்பவும், அத்தகைய ஒப்பந்தங்கள் முடிவடைந்த பின்னர் கையெழுத்திடவும் ஏற்பாடுகன் செய்யப்பட்டுள்ளன. | பிரதான வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களுக்குள் நுழைய ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| வழங்கலுக்கான உத்தியோகபூர்வ உடன்படிக்கைகள் செய்யப்படவில்லை. | | |
| (ஈ) 2007 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியின் போது எண்ணெய் பெறுகை தொடர்பாக இடம்பெற்ற ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் படி, டிசம்பர் 31, 2017 அன்றானவாறு அந்தப் பரிவர்த்தனைகள் மீது நாட்டுக்கான மொத்த இழப்பு ரூ.14,028 மில்லியனாகும். மேலும், வர்த்தக வங்கி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக US$ 8,648,300 ஐக் கோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது. | வர்த்தக உயர் நீதிமன்றத்தில் சிபிசிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் நிலுவையில் உள்ளது.<br><br>வர்த்தக உயர் நீதிமன்றத்தில் ஆரம்ப ஆட்சேபனை தெரிவித்த உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் சிபிசி மேன்முறையீடு செய்துள்ளது, இது இன்னும் நிலுவையில் உள்ளது. | வழக்குகளை முன்கூட்டியே முடித்து, அந்தந்த தரப்பினரிடமிருந்து ஏதேனும் நட்டங்களை மீட்டெடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
| (உ) மார்ச் 16, 2012 திகதியிட்ட சபைத் தீர்மான இல. 04/1114 இற்கமைய, காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக விலைமதிப்புத் திணைக்களத்தை (DOV) வைத்திருப்பதற்கும் அந்தப் பணிகளை 3 மாதங்களிற்குள் முடிப்பதற்கும் ஒரு அனுமதி அளிக்கப்பட்டது. பின், மேலும் ஓர் அனுமதி மே 12, 2012 இல் இந்தப் பணிக்காக ரூ 5.5 மில்லியன் முற்கொடுப்பனவுடன் அளிக்கப்பட்டது. எனினும், இந்த அறிக்கைத் திகதி வரையும் கூட காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு பூர்த்தி செய்யப்படவில்லை. | உரிமையை முடிவு செய்துள்ள சாத்தியமான நிலங்களின் மறுமதிப்பீடு தற்பொழுதே நிறைவடைந்துள்ளது, அரச மதிப்பீட்டுத்திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணத்தொகை மீட்டெடுக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை மறுமதிப்பீடு செய்ய சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ஊ) கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் கையேட்டின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் கூட்டுத்தாபனத்தால் மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் வணிகத் தரகு முறைகள் அளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | வழங்கப்பட்ட அனைத்து விநியோக உரிமைகளும் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன மற்றும் விநியோக உரிமை விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும்போது சந்தைப்படுத்தல் கையேடு வழிகாட்டியாகும். ஆகவே விநியோக உரிமை விண்ணப்பங்களை குறிப்பிடுவதன் மூலமோ அல்லது அதற்கேற்ப சபைக்கு அறிவிப்பதன் மூலமோ வழலகல் செய்யப்படலாம். | கூட்டுத்தாபனம் சந்தைப்படுத்தல் கையேட்டுடன் மற்றும் ஒரு பிரயோகிக்கூடிய வெளிப்படையான நடைமுறைக்கு இணங்க வேண்டும் |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

---

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கையிருப்பு மீளாய்வுக் குழு கூட்டுத்தாபனத்திலிருந்தான உறுப்பினர்களா;>CPSTL>JCT எண்ணெய் வங்கி மற்றும் LIOC> இலங்கை மின்சார | சிபிஎஸ்டிஎலுடன் பல கலந்துரையாடல்கள் மற்றும் எஸ்ஏபி முறைமைக்கான பிரித்தெடுக்கப்பட்ட இருப்பு தரவுகள் இப்போது எஸ்ஆர்சியில் திட்டமிடல் | கூட்டுத்தாபனத்தால் இருப்பினுடைய பொருத்தமான பதிவுகள் பராமரிக்கப்படவேண்டும் |

| | | |
|---|---|---|
| சபை உறுப்பினர்கள், மற்றும் வரிசை அமைச்சிலிருந்து ஓர் அதிகாரி ஆகியோர்களை உள்ளடக்கி இருந்ததுடன் அதன் கூட்டங்கள் ஒவ்வொரு வாரமும் நடைபெற்றன. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் சரக்குகளின் கையிருப்பு மட்டங்கள் தொடர்பாக, ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திக்கும் அதாவது மீள் கட்டளை மட்டம், உயர்ந்த மற்றும் குறைந்த பட்ச மட்டங்கள், மற்றும் மீள் கட்டளை அளவு போன்றவை தொடர்பில் முறையான பதிவுகளைப் பேணவில்லை. பெற்றோலிய உற்பத்திகளின் மீள் கட்டளை அளவு CPSTL இனால் சமர்ப்பிக்கப்பட்ட கையிருப்பு அளவு பராமரிப்பு அறிக்கை மீதான அடிப்படையில் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டதுடன் கையிருப்பு மீளாய்வுக் குழுவுக்கு பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புப் பராமரித்தல் தொடர்பான வேறேந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டதில்லை. எனினும், 2010 இல; SAP முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து சரக்கு கையிருப்புத் தேவைப்பாடு மீதான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | நோக்கத்திற்காக பரிசீலிக்கப்பட்ட பின்னர் இந்த விடயம் தீர்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) கிடைக்கச் செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம், பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிக்கான கலால் தீர்வை வார்நாமத்தில் (Bill of Lading) அல்லது Outturn அளவுகளில்குறிப்பிடப்பட்ட அளவில் எது கூடுதலாக உள்ளதோ அதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் படி,"இது நீண்ட காலத்திற்கு முன்பாக இலங்கை சுங்கத்தால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆரம்பிக்கப்பட்டது. குறைந்த பெறுமதி அடிப்படையில் கொடுப்பனவு செய்வது கூட்டுத்தாபனம் மீது தண்டப் பணம் விதிக்கப்படும் இடரேதுநிலையைக் கொண்டுள்ளது". எவ்வாறாயினும், இந்த நடைமுறையின் துல்லியத்தன்மை கேள்விக்குரியது. | இது இலங்கை சுங்கத்தின் மிக நீண்ட காலத்திற்கு முன்பே தேவைப்பட்டது. பெற்றோலிய எண்ணெயில் வெளிச்செல்லும் அளவை கருத்தில்கொள்ளாமல் கலால் வரியை வசூலிப்பதற்கான அதிக அளவைக் கருத்தில் கொள்வதன் அடிப்படையில் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திடம் சிபிசி விசாரித்தது. ஆனால் நேர்த்தியான மற்றும் தெளிவான வழிகாட்டுதல்கள் பெறப்படவில்லை. இதன்பிரகாரம், 2019 ஆண்டிலிருந்து சுயாதீன சோதனையாளர்களின் கணக்கெடுப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பெறப்பட்ட சரியான தொகைகளிக் அடிப்படையில் துறைமுகத்தில் வெளியேற்ற சுங்கத்திற்கு வரிகளை செலுத்த முடிவு செய்தது. | இதே விடயத்தை எதிர்காலத்திற்கு கொண்டுவரத்கூடாது என்று தொடர்புடைய தரப்பினரின் ஆதரவுடன் ஒரு தீர்வுக்கு வரவேண்டும் |

(இ) பாவனையிலுள்ள 47 வருடப் பழமையான சுத்திகரிப்பாலை (1969 இல் ஆரம்பிக்கப்பட்டது) ஓர் அடிப்படைச் சுத்திகரிப்பாலை என்பதுடன் நாட்டில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான அதிகரிக்கின்ற கேள்வியைத் திருப்தி செய்வதற்கு இயலாததவையாக உள்ளன. இச்சுத்திகரிப்பாலை, குறைந்த செலவில் பெற்றோலிய பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் கீழ் மட்ட உற்பத்திகளை தரமுயர்த்தி பெற்றோல் மற்றும் டீசல் போன்ற உயர் பெறுமதிப் பொருட்களாக்கி, அதன் மூலம் செயற்பாட்டு வினைத்திறனை உச்சப்படுத்துவதற்கான செயற்றிறன்கள் உட்பட, உயர்ந்த தொழில்நுட்பங்களுடன் செயற்படும் சுத்திகரிப்பாலைகளுடன் ஒப்பிடும் போது ஒரு குறைந்த செயற்றிறன் மிகையுடன் இயங்குகிறது. எனினும், ஒரு கிரயப் பயனுறுதியான விதத்தில் சந்தைக்கு அதன் உற்பத்திகளை வழங்குவதை உறுதி செய்யும் முகமாக, உத்தேசிக்கப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்க மற்றும் நவீனமயப்படுத்தும்; (SOREM) செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் இயலாதுள்ளது. முகாமைத்துவத்தால் குறிப்பிட்டவாறு, ஆரம்ப சாத்திய வள ஆய்வறிக்கை பூர்த்தி செய்யப்பட்டும் மற்றும் தேவையான காணி (35 ஏக்கர்கள்) இந்தத் தேவைக்காக கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட, இந்த செயல்திட்டத்திற்காக முதலீடு செய்வதற்கு போதுமான நிதிப் பலமின்மை காரணமாக செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இயலாதுள்ளது. செயல்திட்டத்திற்கான மொத்தச் செலவு 8 வருடங்களை விடக் குறைவான ஒரு மீள்செலுத்தல் காலத்துடன் US$ 2.1 gpy;ypad; எனக் கணிக்கப்பட்டுள்ளதுடன் செயல்திட்டத்தின் தேறிய தற்போதைய பெறுமதி (NPV) US$ 1.535 மில்லியன் ஆகும். மேலும், இந்த தேவைக்காக ரூ.1,003 மில்லியனிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட காணி இற்றை வரை பயனற்று வெறுமனேயுள்ளது.

இந்த நேரத்தில் மாற்றங்கள் மற்றும் சிறிய மேம்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்தில் சுத்திகரிப்பு நிலையத்தை பாதுகாப்பாக இயக்குவதேயானால் மாற்றுவதற்கு சில முக்கியமான உபகரணங்கள் தேவையென்று அடையாளம்காணப்பட்டுள்ளது. ∴ப்ரண்ட் - எண்ட் பொறியியல் வரைபு (FEED) மனுக்கோரல்கள் உலகெங்கிலும் உள்ள திறமையான தரப்பினரிடமிருந்து கோரப்பட்டன, மேலும் ∴பீட் (FEED) பூர்த்தியடைந்தும், ஈபிசி (EPC) கட்டத்திற்கு 2 -3 ஆண்டுகள் தேவைப்படும் திட்டத்தை செயல்படுத்த ஈபிசி (EPC) மனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க பல முதலீட்டாளர்கள் சிபிசி முகாமைத்துவத்தை அணுகினர் மற்றும் ஆனால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இறுதி நடைமுறை முன்மொழிவுகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. திட்ட தாமதம் முற்றிலும் நிதி கிடைக்காத காரணத்தால், சிபிசி 2019 ஆண்டிலிருந்து நிதி அமைச்சின் கீழ் இயங்கும் பொது தனியார் பங்குடமைக்கான தேசிய முகவராண்மையுடன் (NAPPP) ஒரு கலந்துரையாடலைத் தொடங்கியது. இதற்கு மேலதிகமாக,

சொரம் (SOREM) திட்டத்திற்காக முன்னர் 35 ஏக்கர் காணி மற்றும் நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க ஒரு முதலீட்டாளரைத் தெரிவுசெய்யும்போது இந்நேரத்தில் விளைவற்று பயனபடுத்தபடலாம் என்று அடையாளம் காணப்பட்டது.

தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் கேள்வியை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு இது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்

(ஈ) இவ்வெண்ணெயக் குதம், ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர்கள் (10,000 மெட்ரிக் தொன்) கொள்திறன் கொண்ட 100 எண்ணெய்த் தாங்கிகளுடன் ஏனைய இணைந்த வசதிகளையும் கொண்டு, 1930 இல் நிர்மாணிக்கப்பட்டது. எண்ணெய் குதம் அமைந்துள்ள 358.553 ஹெக்டேர்கள் விஸ்தீரணம் கொண்ட காணி இலங்கை அரசாங்கத்தால் அப்போதைய பிரித்தானிய அரசாங்கத்தின் உயர் அரச அதிகாரிக்கு, 999 வருட கால குத்தகைக்கு இலங்கைக்கு சுதந்திரம் அளிக்கப்படுவதற்கு முன்னதாக வழங்கப்பட்டது. 1961 இல், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, கூட்டுத்தாபனம் 250,000 ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை மூன்று தவணைகளில் செலுத்தி காணி, எண்ணெய்க் குதம், கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை ஏப்பிரல் 1, 1964 இலிருந்து உரிமையாக்கியது. இருந்தபோதிலும், மேற்குறித்த காணிக்காக, அரசாங்கத்திட மிருந்து இற்றைய திகதி வரை சட்டபூர்வமான ஆவணங்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

2003 இல், இலங்கை அரசாங்கம; LIOC உடனும் மற்றும் கூட்டுத்தாபனத்துடனும் 35 வருடங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் காணியை குத்தகைக்கு விடுவதற்கு ஓர் உடன்படிக்கைக்கையை ஏற்படுத்தவும் மற்றும் இணங்கிக் கொண்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதற்குமாக இணங்கின. கூட்டுத்தாபனம் இது வரை எந்தவொரு குத்தகை ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை அல்லது தாங்கிகளை உபயோகிக்கவும் இல்லை. எனினும், LIOC அந்த சொத்துகளை 2003 இலிருந்து உபயோகித்து வருகின்றது.

1963 ஆண்டு டிசம்பர் மாதம் அல்லது அதற்கு மேற்ப்பட்ட காலப்பகுதியில் எண்ணெய் நிறுவல் வபாகத்திலுள்ள கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் நோக்கத்திற்காக அரசாங்கம் பிரித்தானிய அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் 250,000 ஜிபிபி (GPP) காக கைச்சாத்திட்டது. இத்தொகை மூன்று தவணைக்கட்டணங்களாக சிபிசியால் செலுத்தப்பட்டிருந்தது.
இதுவரைகூட சிபிசி ஏதாவது உரிமைப்பத்திரத்தை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

பண்ணையின் உரிமையை தெளிவுபடுத்தவும் மற்றும் பண்ணையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பெற்றோலியம் தொடர்பான தொழிலை தொடங்கவும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

(ஈ) **எண்ணெய் போக்குவரத்துக்கான குழாய்த் தொகுதி வலையமைப்பு**

(i) கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை பெற்றோலிய நிலையத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல், டீசல்,மண்ணெண்ணெய் மற்றும் உலை எண்ணெய் போன்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக பல தசாப்தங்களுக்கு

தற்போது ஐந்து குழாய்களில், இரண்டு குழாய்கள் மட்டுமே செயற்பாட்டில் உள்ளன. 12" விட்டத்தின் (dia) மறுசீரமைப்பு சிபிஎஸ்டிஎல் நிதியுடன் 2015 ஆண்டில் 5500 மீற்றர் நீளமுள்ள குழாய் இணைப்பு ஆரம்பிக்கப்பட்டது மற்றும் 97.5% பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. மகாவத்தாவில் மீதிப்பணிகள் (மொத்த

நாட்டில் தடையில்லாத எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக சேதமடைந்த குழாய்களை புனரமைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

| | | |
|---|---|---|
| முன்னதாக இடப்பட்டு பொருத்தப்பட்ட குழாய்த் தொகுதிகள் ஒரு பழுதுபார்ப்பதற்கான நிலையில் இருப்பதாகவும் அவற்றுள் சில மிகவும் பழுதடைந்த நிலையிலும் மற்றும் திருத்தியமைப் பதற்கும் முடியாத நிலையில் உள்ளதினால் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய முனையங்களுக்கு பெற்றோலிய உற்பத்திகளின் தேசியத் தேவைப்பாட்டின் ஒரு பாரிய அளவு இந்தக் குழாய்த் தொகுதிகள் ஊடாகவே கொண்டு செல்லப்படுவதினால் இவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் மாற்றீடு செய்தலுக்காக ஓர் அவசர தேவையுள்ளது. சீர்கெட்டுள்ள இந்தக் குழாய்த் தொகுதிகள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய முடிவுப் பொருட்களின் கொண்டு செல்லுதல் காரணமாக கடுமையான எரிபொருள் நெருக்கடிக்கான ஒரு சாத்தியம் அங்கேயுள்ளது. | வேலைகளில் 140 மீற்றர் - 2.5%) குழாய்ப் பாதையில் குண்டுவீச்சின் மற்றும் எதிர்ப்பு காரணமாக நிறுத்தப்படவேண்டியிருந்தது. மகாவாட்டா மற்றும் மீதோட்டமுல்லவில் 130 வீடுகள் குழாய் தாழ்வாரத்திலும், குழாய் தாழ்வாரம் சுற்றியுள்ள பகுதியில் 289 வீடுகளிலும் இருப்பதை சிபிஎஸ்டிஎல் அடையாளம் கண்டுள்ளது.<br>சிதைந்த குழாய்களை புனரமைப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மேலும் அது போன்ற அகற்றுதல் முடிந்தும், சிபிஎஸ்டிஎல் 12'' விட்ட (dia) குழாய் மற்றும் சிசிபிபி (CCPP) மாற்றுவதன் மூலம் தொடர முடியும். | |
| (ii) முத்துராஜவெல நிலையம் கரையிலிருந்து சுமார் 6 கி.மீ தொலைவிலும் மற்றும் முத்துராஜவெலவிலிருந்து 7.2 கி.மீ தொலைவிலுமாக கடலின் நடுவே அமைந்துள்ள ஒற்றைப் புள்ளி மிதவை நங்கூரமிடல; (SPBM) முறையிலான வசதியொன்றினூடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்கிறது. கடற் கொந்தளிப்பான நிலைமைகளில் அல்லது SPBM பராமரிப்புகளின் கீழ் உள்ள போது மாற்று முறையிலான வழங்கலுக்கான வளம் அங்கிருக்கவில்லை. அதே வேளை, முத்துராஜவெல முனையம் மற்றும் கொலன்னாவை நிலையம் என்பவற்றுக்கிடையில் முனையங்களுக்கிடையிலான உற்பத்தி பொருள் மாற்றங்களுக்கு இணைப்புகள் இல்லை என்பதுடன் அந்த முனையங்களின் உச்ச பயன்பாடும் இந்த மட்டுப்பாடுகள் காரணமாக தடைப்படுகிறது. | கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல நிலையங்களுக்கு இடையில் குழாய் இணைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன | நாட்டில் பொருளாதார மற்றும் பயனுறுதியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக பிரதான நிறுவல்களின் குழாய்த்திட்டத்தை இணைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) செப்டெம்பர் 13, 2012 அன்று அமைச்சரவை அமைச்சர்களால் நாடு முழுவதற்குமான குழாய்த் தொகுதி செயல்திட்டத்தின; (Cross | குறுக்கு நாடு குழாய் திட்டங்கனை நடைமுறைப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன | அமைச்சரவை அங்கீகாரமளித்தன் பிரகாரம் திட்டத்தை நடைமுறைப்படுத்த |

| | | |
|---|---|---|
| Country Pipleline Project) நடைமுறைப்படுத்தலுக்காக அனுமதி அளிக்கப்பட்ட போதிலும், இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை கூட, அது அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

---

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **வனாத்தமுல்லவில் ஹல்கஹா கும்புற காணி -** லங்கா பெற்றோலிய வாயு செயல்திட்டம் மற்றும் ஒரு விளையாட்ட மைதானத் தேவைக்காக இந்தக் காணி ரூ.10.6 மில்லியனிற்கு பெறப்பட்டது. எனினும், இந்தக் காணி அதன் தேவையின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லையென்பதுடன் அது 700 இற்கு மேற்பட்ட அத்துமீறிக் குடியிருப்பவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. | கையகப்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்ட குறித்த நோக்கத்தை தவிர்த்து இந்த சொத்தை உபயோகிக்க முடியாது.<br>அரசகாணிச்சட்டத்தின் (உடைமை மீட்பு) விதிகளின்படி, அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கலாம்.<br>எவ்வாறாயினும், பாதிக்கப்படக்கூடிய பெரும் தொகையான குடும்பங்கள் மற்றும் அதன் விளைவான சமூகப்பாதிப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டு சிபிசி யுடிஏவை பெற்றோலிய அமைச்சினூடாக கலந்தாலோசித்து அதன் பின்னர் இது 2019 ஆண்டில்<br>பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது | குறிப்பிடப்பட்டுள்ளபடி அரசகாணிச்சட்டத்தின் (உடைமை மீட்பு) விதிகளின்படி, அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| **(M) மஹாஹேன காணி** – கிடைக்கப் பெறப்பட்ட ஆவணத் தொடர்புகளின் படி, கூட்டுத்தாபனம் ரூ.0.625 மில்லியன் செலவு செய்து இந்த காணியைக் கொள்வனவு செய்ததுடன் அது கணக்கில் கொள்ளப்படவில்லை. எனினும், இந்தக் காணி அது 1986 இல் கையகப்படுத்தப்பட்ட பின்னரும் அதன் முன்னைய உரிமையாளரால் உபயோகிக்கப்பட்டு வருகிறது. | பிரதேச செயலர், கொலன்னாவை பல நினைவூட்டல்கள் இருந்தபோதிலும், அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், வெற்றிடமாகவுள்ள உடைமைகளை சிபிசிக்கு பல இடங்களில் ஒப்படைக்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், உடைமைகளை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

---

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (m) மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் பாதீட்டில் இருந்து ஒரு தொகையான ரூ.504.1 மில்லியன் 20 மூலதனச் செயல்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அவற்றின் மொத்த கணிப்பீட்டுச் செலவு ரூ.512.8 மில்லியனாகும். எனினும், இந்தச் செயல்திட்டங்கள் மீளாய்வின் கீழான வருட இறுதி வரை நடைமுறைப்படுத்தப் படவில்லை. | இரத்து செய்தல், வேறுபடுத்தல், ஒத்திவைத்தல், நோக்கம் மாறல், பெறுகை நடைமுறையை தாமதப்படுத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் இத்தகைய கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை | முறையான சாத்தியவள ஆய்வுக்கூறுக்கு பின்னர் திட்டங்கள் பாதீட்டில் சேர்க்கப்படவேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 மற்றும் 2018 இல் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 2 செயல்திட்டங்களின் மொத்தக் கணிப்பிடப்பட்ட செலவு ரூ.6,756.8 மில்லியனாகும். எனினும், 2018 வருட இறுதி வரை அவை ஆரம்பிக்கப்படவில்லை. | இத்தகைய திட்டங்கள் நோக்கம் மாற்றம், பெறுகை தாமத செயன்முறை போன்ற பல்வேறு காரணங்களால் தாமதமாகிவிட்டன. | திட்டமிடப்பட்ட காலங்களில் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |
| (இ) 2014 இலிருந்து 2018 காலப் பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட 4 மூலதனச் செயல் திட்டங்கள் அவற்றின் ஆரம்ப கணிக்கப்பட்ட செலவை 20.05 மில்லியனால் அல்லது 15 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையால்விஞ்சியுள்ளது. | நோக்கம் மாற்றம், சந்தை நிலை மாறுவது போன்ற பல்வேறு காரணங்களால் பூர்வாங்க மதிப்பீட்டு செலவு மீறப்பட்டது. | மதிப்பிட்ட செலவை மீறாமல், திட்டமிடப்பட்ட கால அட்டவணையில் திட்டங்களை தொடங்க சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டு மார்ச் 22 இல்அமைச்சரவை அமைச்சர்களால மேற்கொள்ளப்பட்ட தீர்மான இல.12/0295/510/003/TRB இன்படி, வாராந்த அடிப்படையில் உடன் வாங்குவது ஆட்சேபிக்கப்பட்டதால், சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சு நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுடன் பெற்றோலிய உற்பத்திகளின் வழங்கல்களுக்கு கால அடிப்படையிலான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். எனினும்,2018 இல் செய்து கொண்ட செல்லுபடியாகும் 78 ஒப்பந்தங்களில் (14 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன) 52 (கப்பற் சரக்குகள்) மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு முரணான வகையில் உடன் கொள்வனவு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நாட்டின் கேள்வி ஏற்றஇறக்கத்துடன் இருப்பு வேறுபாட்டை உறிஞ்சுவதற்கு சிபிசிக்கு போதுமான சேமிப்புத்திறன் இல்லை, அதேபோல் கால மனுக்கோரல் தொகைகள் நிலையானவை மற்றும் மேலதிகமாக ஏற்படுத்தப்பட்ட தொகைகளை நிரப்புவதற்கான தொகைகளை சரிசெய்ய முடியவில்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் மேலதிகமாக ஏற்படுத்தப்பட்ட தொகைகளை நிரப்புவதற்கு சிபிசி ஒற்றை மனுக்கோரலை பயன்படுத்தாதுவிட்டால், உற்பத்திப் பற்றாக்குறை அல்லது கப்பல் கட்டணங்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது. | அமைச்சரவையின் அமைச்சர்கள் தீர்மானங்களுடன் அது கடைப்பிடிக்கப்படவேண்டும் |

### 3.7 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - 9.4 வழிகாட்டல் கூட்டுத்தாபனம் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாமல் 2018 ம் ஆண்டில் 06 ஊழியர்களை ஏனைய நிறுவனங்களுக்கு | தற்போது இரண்டு ஊழியர்களில் மட்டும் விடுவிக்கப்பட்டு, சிபிசியின் சபைப் பணிப்பாளர்களின் அறிவுறுத்தல்களின்படி இவ் ஊழியர்களை மீண்டும் சிபிசிக்கு | இது தொடர்புடைய வழிகாட்டுதலுடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| விடுவித்துள்ளதுடன் அவர்களுள்4 ஊழியர்களுக்கு கூட்டுத்தாபன உபயோகித்து ஊதியம் வழங்கியுள்ளது. | விடுவிக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தனர். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்**

---

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சீபிஎஸ்ரீஎல் இனால் அறிமுகம் செய்யப்பட்ட முயற்சி வளத் திட்டமிடல; (ERP) உடன் ஈடுபடுதல் தொடர்பாக தங்களது தனிப்பட்ட பொறுப்புகள் தொடர்பாக கூட்டுத்தாபனம் மற்றும் சீபிஎஸ்ரீஎல் மற்றும் எல்ஐஓசி என்பவற்றுக்கிடையில் ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் அங்கிருக்கவில்லை. மேலும், இந்த முறைமை, விசேடமாக எரிபொருள் கையிருப்பு மீளாய்வு நோக்கங்களுக்காக போதுமான வகையில் உபயோகிக்கப்படவில்லை. | சீபிஎஸ்ரீஎல் இனால் முயற்சி வளத் திட்டமிடல் (ERP) அறிமுகப்படுத்தப்பட்டது. சிபிசியில் முயற்சி வளத் திட்டமிடல; (ERP) eilKiwg;gLj;Jtjw;F Kd;du; கையெழுத்திடப்படவேண்டிய ஒரு ஒப்பந்தம், ஆனால் அது எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது அல்லது எரிபொருள் இறக்குமதியில் சிபிசியின் போட்டியாளரான எல்ஐஓசி எவ்வாறு அந்த முறைமையை பகிர்ந்துகொள் அங்கீகாரம் பெற்றது என்பதனைக் குறிக்கும் எதுவும் இல்லை. இருப்பினும் ஒரு வரைபு ஒப்பந்தம் உள்ளது, ஆனால் "முயற்சி வளத் திட்டமிடலின் பொதுப்பயன்பாட்டிற்கு" முறைமையான ஒப்பந்தம் இல்லை. முன்னைய சிபிசியின் முகாமைத்துவம் தாவல் தொழில்நுட்ப ஆலோசகர்களின் சுயாதீன குழுவை நியமித்து எஸ்எபி (SAP) முறைமையை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது மற்றும் பரிந்துரைகளுடன் அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கிறது. தற்போதைய முகாமைத்துவம் முறைமையான உடன்படிக்கை நடவடிக்கை எடுத்து வருகின்றது. | சீபிஎஸ்ரீஎல் மற்றும் எல்ஐஓசி என்பவற்றுடன் ஓர் உடன்படிக்கைக்கு வருவதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சபையினால் கிரமமான வகையில் மீளாய்வு செய்யப்படவில்லை. குழுவினால் வேண்டப்பட்ட தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முழுமையாகவும் மற்றும் தகுந்த சமயத்திலுமாக வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இதுவரை நடாத்தப்பட்ட அனைத்து கணக்காய்வு குழு கூட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட குறிப்புக்கள் அங்கீகாரத்திற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. சபைக்கூட்டத்தில் இயக்குனர்கள் குறிப்புக்களை மீள்பரிசீலித்து அக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கும்போது அவற்றை அங்கீகரிக்கின்றனர். ஒவ்வொரு கணக்காய்வு குழு கூட்டங்களுக்கு முன்னர் , கணக்காய்வு முன்னைய குழுக்கூட்டம் நடாத்தப்பட்டு, தொடர்புபட்ட தொழிற்பாட்டு தலைவர்களிடமிருந்து தேவையான பதில்கள் பெறப்படுகின்றன. | கணக்காய்வு குழுவால் வேண்டப்பட்ட தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் முறையான அதிகாரிகளால் முழுமையாகவும், சரியான நேரத்தில் வழங்கப்படுவதனையும் உறுதி செய்ய வேண்டும். |